பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி

# புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் டி.இராமச்சந்திரன்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.10-**

**"பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் டி.இராமச்சந்திரன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-



புதுச்சேரியின் முன்னாள் முதலமைச்சரும், புதுவை மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைப்பாளருமாகிய டி. ராமச்சந்திரன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் சார்பில் முதலமைச்சராக இருந்து, புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்திச் சாதனை படைத்தவர்.

அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

காசநோய் ஊட்டச்சத்து உதவித் தொகை இந்த மாதம் முதல்

# ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்படும் !

'காசநோய் இல்லாத் தமிழகம்' பிரச்சார நிகழ்ச்சியில் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

**வேலூர், டிச. 10-**

**அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் (07.12.2024) அன்று வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கூட்ட ரங்கில், தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின்கீழ் காசநோயில்லா தமிழகத்திற்கான விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்கப்பட்டு, அமைச்சர் பெருமக்களால் விழிப்புணர்வு பதாகை வெளியிடப்பட்டது.**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது :-**



ஒன்றிய அரசின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப காசநோய் இல்லா இந்தியா எனும் தலைப்பில் 100 நாட்கள் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளும் முகாம் தமிழ்நாட்டில் முறையாக தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை காசநோய் இல்லா இந்தியா எனும் தலைப்பில் 100 நாட்களுக்கான பிரச்சாரம் இன்று இங்கு தொடங்கப்பட்டாலும், கடந்த மூன்றரை ஆண்டுகளாக காசநோய் இல்லா தமிழ்நாடு எனும் தலைப்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதன் காரணமாக ஒன்றிய அரசு தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அவர்கள் கூறியதுபோல் இந்தியாவில் தமிழ்நாட்டில் மருத்துவத்துறையில் சிறப்பான கட்டமைப்பு பெற்றிருக்கிறது, மருத்துவத்துறையின் சேவையில் மிகச் சிறந்த பண்பை பெற்றிருக்கிறது என்கின்ற வகையில் வாழ்த்தி உரையாற்றியிருக்கிறார்கள். எதிரில் வீற்றிருக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த களப்பணியார்களின் கடின உழைப்பினால் காசநோய் இல்லா தமிழ்நாடு எனும் இலக்கு எட்டப்பட்டு வருகிறது. அதற்காக பல மாவட்டங்கள் குறிப்பாக நீலகிரி, திருச்சி, திருவாரூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, மதுரை, கன்னியாகுமரி, கரூர் போன்ற பல்வேறு மாவட்டங்கள் காசநோய் இல்லா மாவட்டங்கள் என்கின்ற பரிசுகளையும், ஒன்றிய அரசு வழங்குகின்ற பரிசுகளான தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற பல்வேறு பதக்கங்களையும் கடந்த மூன்று ஆண்டுகளாக பல்வேறு மாவட்டங்கள் பெற்று வருகிறது.

**கலைஞரின் 'வருமுன் காப்போம்' திட்டம்**

முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 01ந் தேதி, 23 டிஜிட்டல் பொறுத்தப்பட்ட எக்ஸ்ரே காசநோய் நடமாடும் வாகனங்களை சென்னையில் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை 48 வாகனங்கள் பயன்பாட்டில் இருக்கின்றது. இந்த 48 வாகனங்களில் 23 வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டவை. தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல் ஊட்டச்சத்து தருகின்ற தன்னார்வலர்களை சிறப்பிக்கின்ற வகையில் ஏறத்தாழ 100 பேருக்கு விருதுகளையும், அவர்களுக்கான நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல் 2022 டிசம்பர் திங்கள் 29 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சியில் சன்னாசிப்பட்டியில் ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தை 01 கோடியே 01வது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்கிய அவர்கள் அங்கு நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சியில் ரூ.11.67 கோடி மதிப்பிலான 46 CB Nat என்னும் அதிநவீன காசநோய் கண்டறியும் கருவிகளை, முதலமைச்சர் அவர்கள் இத்துறைக்கு ஒப்படைத்தார்கள். அதேபோல் 2024 ஜனவரி திங்கள் 05ஆம் தேதி ரூ.27.92 கோடி மதிப்பீட்டில் 192 Nat அதிநவீன காசநோய் கண்டறியும் கருவிகள் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் போடப்பட்டு அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாட்டில் அதிதுல்லியமாக காசநோய் கண்டறியும் பணிகள் என்பது தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது வருமுன் காப்போம் எனும் மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்து செயல்படுத்தி இருந்தார்கள். 10 ஆண்டு காலம் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

நமது அரசு 2021ஆம் ஆண்டு பொறுப்பேற்றபிறகு வருமுன் காப்போம் எனும் திட்டத்தை கலைஞரின் வருமுன் காப்போம் என்கின்ற அளவில் பெயர் மாற்றம் செய்து சேலம் வாழப்பாடியில் தமிழ்நாடு முதலமைச்சர் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தை தொடங்கி வைக்கும்போது சொன்னது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 3 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். தமிழ்நாட்டில் அன்றைக்கு இருந்த 21 மாநகராட்சியில் சென்னை நீங்கலாக மற்ற மாநகராட்சிகளில் ஒவ்வொரு மாநகராட்சிக்கு 4 இடங்களிலும், சென்னை மாநகராட்சிக்கு 15 இடங்களிலும் என்று கூறி, 1250 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இருப்பினும் 1250 மருத்துவ முகாம்கள் என அறிவிக்கப்பட்டு 1260 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

இதில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 9,06,427 பேர், 2022-23 ஆம் ஆண்டு இலக்கு 1250, நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் 1532 ஆகும். இதில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 15,08,469 ஆகும். 202324 ஆம் ஆண்டு இலக்கு 1250, நடத்தப்பட்ட முகாம்கள் 1253, பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 12,54,430 பேர். நடப்பாண்டில் இலக்கு 1250, நடத்தப்பட்டுள்ள முகாம்கள் 866, பயன்பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 8,81,906 பேர். இந்த முகாம்களில் நான் ஏற்கெனவே கூறிய டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனங்கள் அனைத்து முகாம்களிலும் ஒரு அங்கமாக நிறுத்தப்பட்டு வருபவர்களுக்கு எக்ஸ்ரே எடுப்பது, அவர்களுடைய சளி மாதிரிகளை பரிசோதிப்பது போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காசநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை 100% பயனாளிகளுக்கு சென்று சேர்கிறதா என்றும் கண்காணிக்கப்படுகிறது. **அந்தவகையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து உதவித்தொகை மாதம் ரூ.500 என்கின்ற வகையில் வழங்கப்பட்டு வந்தது. இந்த மாதம் முதல் காசநோய்க்கான ஊட்டச்சத்து உதவித்தொகை மாதம் ரூ.500/ லிருந்து ரூ.1000/ஆக உயர்த்தி தரப்பட விருக்கிறது** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் (ஒன்றிய அரசு) ஹர்ஷ் மங்களா, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் (தமிழ்நாடு அரசு) மரு. அருண்தம்புராஜ். பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (காசநோய்) கூடுதல் இயக்குநர் மரு.ஆஷா ஃபெட்ரிக் மற்றும் மருத்துவர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில், தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.அன்பு இளவல் இராஜா ஸ்டாலின் உதவியுடன் களமாவூர் ரெனேசான்ஸ் மாற்றுத்திறனாளிகள் மலர்ச்சி மையத்தில் உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குறிஞ்சிவாணன், தலைமைக் கழக பேச்சாளர் தமிழ் இனியன், கந்தர்வகோட்டை தொகுதி ஒருங்கிணைப்பாளர் எழில் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வானூர் சட்டமன்ற தொகுதி, கிளியனூர் ஒன்றியம் கொஞ்சி மங்கலம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையில் அரசு நிவாரண தொகை ரூ 2000 மற்றும் கழகத்தின் சார்பில் அரிசி, மளிகை பொருட்கள், புடவை, போர்வை பிரட், பிஸ்கட் உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி , மாவட்ட பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் கிளியனூர் கே.எஸ். ராஜி, பி.கே.டி.முரளி, மைதிலி ராஜேந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் உஷா.பி.கே.டி முரளி துணைத் தலைவர் பருவ கீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தேவேந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் வேலுஜி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கௌதம், பிரேமா குப்புசாமி, கிளியனூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் புஷ்பராஜ், குழந்தைவேலு, சிவக்குமார் , தனபால் ராஜ், பழனி, அழகேசன், அய்யம்மாள் சுப்பிரமணி கிளைச் செயலாளர்கள் ஜெயமூர்த்தி, மஞ்சினி, அல்லிமுத்து, சுந்தரம், தெய்வசிகாமணி, இளைஞர் அணி ராஜவேல், விஜயகுமார், செந்தில், அய்யப்பன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தி.மு.க. போராட்டம் எதிரொலி

# திருவாரூரில் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் மீண்டும் திறப்பு !

முதல்வர் மு.க.ஸ்டாலின் - கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பொதுமக்கள் நன்றி!

திருவாரூர், டிச.10-

திருவாரூரில் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட ரயில்வே மெயில் சர்வீஸ் எனப்படும் தபால்கள் பிரிக்கும் ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு மூடுவதற்கு சட்டமன்ற உறுப்பினரும் மாவட்டச் செயலாளருமான பூண்டி. கே.கலைவாணன் கண்டனம் தெரிவித்து, தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடம் வைத்த கோரிக்கையையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் கனி மொழி ஆகியோர் எடுத்த நடவடிக்கைகளின் பலனால் ஆர். எம்.எஸ். அலுவலகம் மாற்றப்படுவது நிறுத்தி வைக்கப்பட்ட்டுள்ளது.

திருவாரூரில் இருந்து மயிலாடுதுறைக்கு மாற்றுவதாகக்கூறி 52ஆண்டுகளாக சொந்தக் கட்டிடத்தில் இயங்கிவருவதும், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டதுமான ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் இரண்டாவது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு மூடுவதற்கு முன்வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து திருவாரூர் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் எதிரே திமுக சார்பில் அனைத்து கட்சிகள் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ் எம்.பி. தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை மாற்றுவதற்கு கண்டனம் தெரிவித்ததோடு, இதுகுறித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களிடமும் , நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களிடமும் தகவல் தெரிவிக்கப்பட்டு ஆர்.எம்.எஸ். அலுவலகத்தை திருவாரூரிலேயே இயங்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி ஆர்.எம்.எஸ். இடமாற்றும் குறித்து தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முயற்சியால் திருவாரூரில் ஆர்.எம்.எஸ்.அலுவலகம் அதே இடத்தில் இயங்கவும், தரம் உயர்த்தப்பட்ட ஐ.சி.எச். அலுவலகமாகவும் இயங்கவும் ஒன்றிய அரசால் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதற்கு முயற்சிகளை மேற்கொண்ட தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அவர்களுக்கும், திமுகவுடன் இணைந்து போராடிய அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அனைத்து சமூக இயக்கங்களுக்கும் திருவாரூர் மக்கள் நன்றியை தெரிவித்துள்ளனர்.

'சட்டக் கதிர்' ஆசிரியர் வழக்கறிஞர்

# வி.ஆர்.எஸ். சம்பத் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்!

கழக முன்னணியினர் நலம் விசாரித்தனர்!

சென்னை, டிச.10-

வழக்கறிஞரும், சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் தனியார் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு நலமுடன் வீடு திரும்பினார்.

சமீபத்தில் மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் பதினோராவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்தி விட்டுச் சென்னை திரும்பிய வி.ஆர்.எஸ் சம்பத் அவர்கள் வேறு ஒரு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நவம்பர் 30 அன்று துபாய் பயணம் மேற்கொள்வதற்காக சென்னை விமான நிலையம் சென்றார். கனமழை காரணமாக விமானம் காலதாமதம் ஆனதால் அன்று இரவு சென்னை ஐ.சி.டி. கிராண்ட் சோழா ஓட்டலில் தங்கினார்.

நவம்பர் 30 அதிகாலை விமானப் பயணம் தயாராகிட சென்றபோது வழுக்கி விழுந்து வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனடியாக ஐ.சி.டி. சோழா ஹோட்டல் நிர்வாகத்தினர் அவரை மியாட் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர். கடந்த ஒரு வாரமாக மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெற்று வந்த வி.ஆர்.எஸ்.சம்பத் சிகிச்சை முடிந்து நலமுடன் இல்லம் திரும்பினார்.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆஸ்திரேலியா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சங்க பிரதிநிதிகளும், கழக முன்னணியினரும், உயர் அதிகாரிகளும், வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களின் உடல் நலம் குறித்து தொலைபேசி வழியாகவும் நேரிலும் விசாரித்தனர்.



தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில் தமிழ்நாடு துணைமுதல்வர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் கோவிந்தன் ஏற்பாட்டில் தர்மபுரி நகர பகுதி உழவர் சந்தை அருகில் 500 ஆதரவற்ற நபர்களுக்கு புடவை,போர்வையினை தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி வழங்கினார்.உடன் மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் இரா.தாமரைச் செல்வன், மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, தர்மபுரி நகர செயலாளர் நாட்டான் மாது, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம் ஜி எஸ் வெங்கடேஸ்வரன், வழக்கறிஞர் தலைவர் பி.கே.தாஸ்,சர்வேயர்.கோவிந்தன்(ஓய்வு) மற்றும் முன்னாள், இந்நாள், நகர மன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஃபெஞ்சல் புயல் வெள்ள நிவாரணப் பொருட்களை விழுப்புரம் மாவட்டத்திற்குக் கொண்டு செல்லும் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் கொடியசைத்து அனுப்பி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி உள்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.